# அறிவித்தல்

(0.6 மில்லியன் ரூபாய். இரண்டு மற்றும் இரண்டிற்கு குறைவான அங்கத்தவர்களிற்கானது)

2023 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் வீட்டுத்திட்டத்திற்கு பின்வரும் நியதிகளை கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பயனாளி தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அடிப்படை தகைமைகள்

1. இலங்கையில் எப்பாகத்திலும் தனது பெயரிலோ அல்லது தனது குடும்ப அங்கத்தவர் பெயரிலோ வீடு ஒன்றை கொண்டிருக்காதவர்
2. சட்ட ரீதியான காணி ஆவணத்தை கொண்டுள்ள குடும்பங்கள்.
3. தனது பெயரிலோ அல்லது தனது குடும்ப அங்கத்தவர் பெயரிலோ அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட உதவிகள் எதனையும் இதுவரை பெற்றுக்கொள்ளாத வீடு தேவைப்படும் குடும்பங்கள்.
4. தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைகளிற்கு மத்தியிலும் **வழங்கப்படும் 0.6 மில்லியன் தொகையுடன் 340 சதுர அடி அளவுப்பிரமாணத்திற்கேற்ப ஓட்டுக்கூரை** வீட்டை பூரணப்படுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும் குடும்பங்கள்.
5. 2009 இற்கு முன்னர் திருமணம் செய்தவர்கள்.(புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களிற்கு இது பொருத்தமற்றது)
6. வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேற்றத்தின் பொருட்டு தனது சொந்தகாணிக்கு மீளத்திரும்பியிருத்தல் வேண்டும் என்பதுடன் **அக்காணியில் தொடர்ச்சியாகவும் தற்போதும் வசிக்கும் குடும்பமாகவும் இருத்தல் வேண்டும்.**

## தெரிவு செய்வதற்கான நியதிகள்

- **இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்து மீளக்குடியமர்ந்த குடும்பங்கள்**
- **ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்கள்.**
- பெண் தலைமைத்துவ குடும்பங்கள்
- மாற்றாற்றலுடையோரை அங்கத்தவராக கொண்ட குடும்பங்கள்
- யுத்தத்தினால் காணாமற்போன அங்கத்தவர்களினை கொண்ட குடும்பங்கள்.
- யுத்தத்தினால் குடும்ப உறுப்பினர்கள் இறந்தகுடும்பங்கள்
- புனர்வாழ்வளிக்கப்பட்ட உறுப்பினரை கொண்டமைந்த குடும்பங்கள்
- போர் அனர்த்தத்தினால் நிரந்தர வீடு அழிவடைந்த குடும்பங்கள்
- இந்தியாவிலிருந்து குடும்பமாக மீளத்திரும்பியகுடும்பங்கள்
- தாய் தந்தை இருவரையும் இழந்த 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர் தலைமைத்துவ குடும்பங்கள்.

(அடிப்படை தகைமைகள் மற்றும் தெரிவு செய்வதற்கான நியதிகளை உறுதிப்படுத்தும் வலிதான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

முன்னுரிமைப்படுத்திய ஒழுங்கில் தவறுகள் இருப்பின் அல்லது இந்நியதிகளின் கீழ் நீங்கள் உள்வாங்கப்பட வேண்டியவர்கள் எனின் அல்லது தெரிவுசெய்யப்பட்டவர்கள் பொருத்தமற்றவர்கள் என நீங்கள் கருதின் அது தொடர்பான எழுத்து மூல முறைப்பாடுகள் 28.04.2023 முதல் 22.05.2023 வரை பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். தங்களது முறைப்பாடுகளை வரவேற்பு கருமபீடத்தில் இதற்கென அமைக்கப்பட்ட முறைப்பாட்டு பெட்டியினுள் இடவும். இத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்பதனை தங்களிற்கு தயவுடன் அறியத்தருகின்றேன்.

**குறிப்பு :- இங்கு காட்சிப்படுத்தப்பட்ட பட்டியல் இறுதியான பட்டியல் அல்ல. எமக்கு கிடைக்கப்பெறும் வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் பரிசீலனையின் பின்னரும் இப்பட்டியலில் மாற்றங்கள் செய்யப்படும்.**

உதவிப் பிரதேசசெயலாளர்,
பிரதேச செயலகம்,
காரைநகர்.

K.Gajaney
Divisional Secretary
Divisional Secretary
Divisional Secretariat
Karainagar

CS CamScanner

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின்
ரூபா 0.6 மில்லியன் பெறுமதியான வீடமைப்புத்திட்டம் - 2023

மாவட்டம் :- யாழ்ப்பாணம்  பிரதேச செயலகம் :- காரைநகர்

| இல | முழுப்பெயர் | தே.அ.அ.இல | அங். எண் | கி.அ.பிரிவு | முகவரி | குடும்பநிலை (2009 முன்னர் குடும்பமாக இடம்பெயர்ந்தவர்) உச்சபட்சம் புள்ளிகள் 15 | குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை (அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப (உச்சபட்சம் புள்ளிகள்15) | குடும்பத்தின் பொருளாதார நிலைமை (புள்ளிகள்15) | 60 வயதிற்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தலைவர்/தலைவி(05 புள்ளிகள்) | பெண் தலைமைத்துவம்/ பெற்றோரை இழந்த சிறுவர் தலைமைத்துவக் குடும்பம் (புள்ளிகள்15) | போரினால் மாற்றுத்திறனாளி ஆக்கப்பட்டோர் ( புள்ளிகள்15) | யுத்தம் காரணமாக அங்கத்தவர்களினை அல்லது காணாமல் போன அங்கத்தவர்களினை கொண்ட குடும்பம் (புள்ளிகள்10) | புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களினை கொண்ட குடும்பம் (புள்ளிகள்10) | மொத்தப்புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செல்லத்துரை கோடிலிங்கம் | 483031009V | 2 | J/46 காரை வடக்கு | நாவலடி கேணி காரைநகர் | 15 | 15 | 15 | 5 | 0 | 0 | 0 | 0 | 50 |
| 2 | சின்னத்துரை மயூரன் | 840135050v | 2 | J/44 காரை தெற்கு | தோப்புக்காடு, காரைநகர் | 15 | 15 | 15 | 0 | 0 | 0 | 0 | 0 | 45 |
| 3 | சிவலிங்கம் விக்கினேஸ்வரியம்மா | 493654500V | 2 | J/44 காரை தெற்கு | தோப்புக்காடு, காரைநகர் | 15 | 15 | 7 | 0 | 0 | 0 | 0 | 0 | 37 |

தங்களது முறைப்பாட்டிற்கு எம்மால் வழங்கப்படும் தீர்மானம் தங்களுக்கு திருப்தியளிக்காத பட்சத்தில் எமது தீர்மானப்பிரதியுடன் (இணைப்பு IV) மாவட்ட செயலகத்தில் மேன்முறைப்பாடு செய்து தங்களுக்குரிய தீர்வினை பெற்றுக்கொள்ளலாம் என்பதனை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தயாரித்தவர் K. vag

சரிபார்த்தவர்
பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்
இ.திலீபன்
பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலருக்காக
பிரதேச செயலகம்
காரைநகர்
2023/04/24

அனுமதித்தவர்
உதவிப்பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்,காரைநகர்
K.Gajaney
Assistant Divisional Secretary
For Divisional Secretary
Divisional Secretariat
Karainagar

CamScanner